# April 20, 2026 – தினமணி செய்தித்தாள் – சிறு துணுக்கள்

1. விருதுநகர் அருகே தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 23 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். தொழிலாளர்கள் 7 பேர் காயமடைந்தனர். மேலும், மீட்புப் பணியின்போது மீண்டும் வெடி விபத்து ஏற்பட்டதில் போலீஸார் உள்பட 12 பேர் காயமடைந்தனர்.

(i) விருதுநகர் மாவட்டம், கட்டனார்பட்டியில் உள்ள பட்டாசு ஆலையில் சேர்வைக்காரன்பட்டி, திருத்தங்கல், கோவிந்தநல்லூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். இந்த ஆலையில் 35-க்கும் அதிகமான தொழிலாளர்கள் பட்டாசுகள் தயாரிப்பில் ஈடுபட்டனர்.

2. இலங்கை அதிபர் அநுர குமார திசாநாயகவை இந்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் சந்தித்தார். அப்போது இலங்கையில் இந்தியா சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீட்டு வசதித் திட்டம் குறித்தும், மீனவர் பிரச்னை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்தும் ஆலோசித்தார்.

(i) இரு நாள்கள் அரசுமுறைப் பயணமாக 49 பேர் குழுவுடன் இலங்கை வந்த சி.பி.ராதாகிருஷ்ணனை கொழும்பில் உள்ள பண்டாரநாயக விமான நிலையத்தில் விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே மற்றும் மூத்த அதிகாரிகள் வரவேற்றனர்.

(ii) இதுவே இலங்கைக்கு இந்திய குடியரசு துணைத் தலைவர் ஒருவர் மேற்கொள்ளும் முதல் சுற்றுப்பயணம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

(iii) இலங்கையில் இந்தியா சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீட்டு வசதித் திட்டம், அண்மையில் டித்வா புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நிவாரணமாக இந்தியா வழங்கிய ரூ.4,000 கோடியில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து இருவரும் விவாதித்தனர். குறிப்பாக, இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தமிழ் சமூகத்தினர் வசிக்கும் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மறுகட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் மீனவர் பிரச்னைகள் குறித்தும் இருவரும் கலந்துரையாடினர்.

(iv) முக்கிய ஒப்பந்தங்கள்கையொப் பமாகும்:

- சி.பி.ராதாகிருஷ்ணனின் இலங்கைப் பயணத்தின் ஒரு பகுதியாக பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமாக வாய்ப்புள்ளதாக இலங்கை வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.

3. இந்தியா – அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தத்தின் முதல் கட்டம் குறித்து திங்கள்கிழமை (ஏப். 20) முதல் 3 நாள்களுக்கு இந்திய-அமெரிக்க குழுக்கள் பேச்சுவார்த்தை நடத்த உள்ளன.

(i) இந்தியா-அமெரிக்கா இடையிலான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தின் முதல் கட்டத்துக்கான செயல்திட்டத்தை கடந்த பிப்ரவரியில் இரு நாடுகளும் இறுதி செய்தன. இந்தச் செயல்திட்டத்தின்படி, இந்தியப் பொருள்கள் மீதான அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் வரியை 50 சதவீதத்தில் 18 சதவீதமாக குறைக்க அந்நாடு ஒப்புக்கொண்டது.

(ii) எனினும் டிரம்ப்பின் வரி விதிப்பு செல்லாது என்று அமெரிக்க உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து, அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் அனைத்து நாடுகளின் பொருள்கள் மீது கடந்த பிப்.24 முதல் 150 நாள்களுக்கு டிரம்ப் 10 சதவீதம் வரி விதித்தார்.

(iii) இந்த மாற்றங்கள் காரணமாக, இந்தியா–அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் குறித்து இருநாடுகளின் குழு பிப்ரவரியில் நடத்தவிருந்த பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டது.

(iv) இந்நிலையில், வர்த்தக ஒப்பந்தத்தின் முதல் கட்டம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த இந்திய குழு திங்கள்கிழமை (ஏப். 20) அமெரிக்கா செல்கிறது. ஒப்பந்தம் தொடர்பாக மூன்று முதல் நான்கு மாதங்கள் இடைவெளிக்குப் பின்னர், இருநாட்டு குழுக்களும் நேரடியாகச் சந்திக்க உள்ளன.

4. குறுகிய தொலைவில் உள்ள இலக்குகளைத் தாக்கி அழிக்கக்கூடிய பாலிஸ்டிக் ஏவுகணைகளை, வடகொரியா கடலில் ஏவியதாக தென்கொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

(i) அணு ஆயுதங்களைத் தயாரிக்க மிகத் தீவிரமான நடவடிக்கைகளை வடகொரியா மேற்கொண்டு வருவதாக ஐ.நா.வின் சர்வதேச அணு சக்தி முகமை அண்மையில் எச்சரித்த நிலையில், இந்த ஏவுகணைகளை கொரியா ஏவியுள்ளது. வடகொரியாவின் வடக்கு சின்போ பகுதியில் இருந்து ஏவப்பட்ட அந்த ஏவுகணைகள், சுமார் 140 கி.மீ. தொலைவு வரை, அந்நாட்டின் கிழக்கு கடற்பகுதி நோக்கிப் பாய்ந்த தாகதென்கொரிய முப்படை தலைமைத் தளபதி தெரிவித்தார்.

(ii) வடகொரியாவின் எந்தவொரு மிரட்டலுக்கும் தகுந்த பதிலடி அளிக்கத் தயாராக இருப்பதாக தெரிவித்த தென் கொரியா, வடகொரியாவின் இந்தச் செயல்பாடுகள் குறித்த தகவலை அமெரிக்கா மற்றும் ஜப்பானுடன் பகிர்ந்து வருவதாகத் தெரிவித்தது.

(iii) தென்கொரியாவில் நடைபெற்ற தேசியப் பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில், வடகொரியாவின் தொடர் பாலிஸ்டிக் ஏவுகணை சோதனைகள் குறித்து தென்கொரியாவின் மூத்த அதிகாரிகள் கவலை தெரிவித்தனர். இந்த நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று வடகொரியாவை அவர்கள் வலியுறுத்தினர்.

5. இஸ்ரேல்–லெபனான் அரசு இடையேயான சண்டை நிறுத்தம் தொடர்பான அமெரிக்காவின் அறிவிப்பை ஹிஸ்புல்லா அமைப்பு நிராகரித்துவிட்டது.

(i) ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேலிய படைகள் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, பதிலுக்கு இஸ்ரேல் மீது லெபனானில் உள்ள ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா அமைப்பினர் ராக்கெட்டுகளை வீசியும், ட்ரோன்களை ஏவியும் தாக்குதல் நடத்தினர். உடனடியாக இஸ்ரேலிய படைகள், லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிக்குள் நுழைந்து, அங்குள்ள கிராமங்களைத் தரைமட்டமாக்கின. இதில் ஏராளமானோர் உயிரிழந்தனர்.

(ii) இதனிடையே, ஈரான், அமெரிக்கா– இஸ்ரேல் இடையே சண்டை நிறுத்தம் ஏற்பட்டது. ஆனால் ஹிஸ்புல்லா கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்கள் மீது இஸ்ரேலிய படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தின. இதற்கு ஈரான் எதிர்ப்பு தெரிவிக்கவே, அமெரிக்காவின் ஏற்பாட்டின் பேரில் இஸ்ரேல் மற்றும் லெபனான் அரசு இடையே அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இதன்முடிவில், இஸ்ரேல்–லெபனான் அரசுக்கு இடையே 10 நாள்கள் சண்டை நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. எனினும், இந்த சண்டை நிறுத்தம் தொடர்பான அமெரிக்காவின் அறிவிப்பை ஹிஸ்புல்லா அமைப்பு நிராகரித்து விட்டது.

6. 'பருவநிலை, காற்று மாசு மற்றும் தட்பவெப்ப நிலையைக் கண்காணிப்பதற்கான 'ஜி20' செயற்கைக்கோள் வரும் 2027–இல் விண்ணில் ஏவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்று இஸ்ரோ தலைவர் வி.நாராயணன் தெரிவித்தார். தெலங்கானா மாநிலம், ஹைதராபாதில் உள்ள இந்திய அரசுப் பொறியாளர்கள் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு அமைப்பு (டிஆர்டிஓ), இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ), இந்திய ஏரோனாடிகல் சொசைட்டி உள்ளிட்ட அமைப்புகளின் விஞ்ஞானிகள் மத்தியில் வி.நாராயணன் பேசியதாவது:

(i) ஒரே ஏவுகலனில் (ராக்கெட்) எந்தவித மோதலுக்கும் உள்ளாகாமல் 100–க்கும் அதிகமான (104 செயற்கைக்கோள்கள்) செயற்கைக்கோள்களை விண்ணில் நிலைநிறுத்திய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது. தற்போது, ஜி–20 நாடுகளின் பயன்பாட்டுக்காக (ஐரோப்பிய ஒன்றியம், ஆப்பிரிக்க ஒன்றியம், இந்தியா, அமெரிக்கா, ரஷியா, சீனா உள்பட 21 நாடுகளை உள்ளடக்கிய அமைப்பு) 'ஜி–20 செயற்கைக்கோளை விண்ணில் ஏவுவதற்கான பணியை இஸ்ரோ மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தில் இந்தியா முன்னணி பங்கை வகிக்கிறது. பருவநிலை, காற்று மாசு மற்றும்

தட்ப வெப்ப நிலையைக் கண்காணிப்பதற்கான இந்த செயற்கைக்கோள் வரும் 2027– இல் விண்ணில் ஏவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

(ii) 'மேலும், 'ஏராளமான வர்த்தக ரீதியிலான செயற்கைக்கோள் திட்டங்களையும் இஸ்ரோ செயல்படுத்தி வருகிறது. 34 நாடுகளின் 433 செயற்கைக்கோள் உள்பட வணிக ரீதியில் விண்ணில் செயற்கைக்கோள்களை ஏவும் நடவடிக்கைகளை இஸ்ரோ மேற்கொண்டுள்ளது. வணிக ரீதியில் மிக அதிக எடை கொண்ட செயற்கைக்கோளையும் இஸ்ரோ விண்ணில் வெற்றிகரமாக ஏவியுள்ளது.

(iii) வரும் 2040–இல் விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்புவதற்கான பணியில் இஸ்ரோ தீவிரமாகப் பணியாற்றி வருகிறது. இத்திட்டத்தை இந்தியா வெற்றிகரமாகச் செயல்படுத்தினால், விண்கலம் ஏவுதல் தொழில்நுட்பம், செயற்கைக்கோள் தொழில்நுட்பம், செயற்கைக்கோள் பயன்பாட்டு திட்டங்கள், மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் திட்டங்களில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் ஒன்றாக இந்தியாவும் சேர்ந்துவிடும்.

(iv) மேலும், 'சமுத்ரயான்' என்ற ஆழ்கடல் ஆராய்ச்சித்திட்டத்துக்காக ஆழ்கடலின் உயர் அழுத்தத்தைத் தாங்கும் வகையிலான 100 மி.மீ. பருமனுடன் 2.2 மீட்டர் சுற்றளவுடன் கூடிய டைட்டேனியம் கலனை உருவாக்கும் பணியில் இஸ்ரோ ஈடுபட்டு வருகிறது' என்றார் அவர்.

7. ஒடிஸா தலைநகர் புவனேசுவரத்தில் இந்தியாவின் முதல் அதிநவீன முப்பரிமாண (3டி) கண்ணாடி சிப் பேக்கேஜிங் ஆலையின் கட்டுமானப் பணிக்கு மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், மாநில முதல்வர் மோகன் சரண் மாஜீ ஆகியோர் அடிக்கல் நாட்டினர்.

(i) இதுதொடர்பாக மோகன் சரண் மாஜீ 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'ஒடிஸாவில் தொழில்துறை வேகமாக பரிணாம வளர்ச்சி அடைந்து வருகிறது.

(ii) இந்தியாவின் முதல் அதிநவீன 3டி கண்ணாடி சிப் பேக்கேஜிங் ஆலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இது மைல்கல் தருணமாகும். இந்தத் தொலைநோக்குப் பார்வை கொண்ட திட்டம் பெரிய அளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அதிநவீன மின்னணு உற்பத்தியில் ஒடிஸாவை பெரும் சக்தியாக நிலைநிறுத்தும்.

(iii) இது வெறும் தொழில் முதலீடு மட்டுமல்ல. வருங்கால தொழில் நுட்பங்கள் எங்கு உருவாக்கப்படும் என்பதற்கான பிரகடனம் என்று தெரிவித்தார்.

(iv) செமிகண்டக்டர் உற்பத்தி பணியில் சிப் பேக்கேஜிங் கடைசி கட்டமாகும். இந்நிலையில் சிப் பேக்கேஜிங் ஆலை குறித்து அதிகாரி ஒருவர் கூறுகையில், 'ஒடிஸாவில் சிப் பேக்கேஜிங் ஆலை கட்டுமானம் மூலம், உலகின் மிக அதிநவீன சிப் பேக்கேஜிங் தொழில்நுட்பம் இந்தியாவுக்கு வரவுள்ளது. இந்த ஆலையை சுமார் ரூ.1,943 கோடி செலவில் கட்டமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இந்த ஆலை மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 2,500 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

(v) இந்த ஆலையில் தயாரிக்கப்படும் சிப்கள் விண்வெளித் துறை, பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, 5ஜி தொழில்நுட்பங்கள், தரவு மையங்கள் உள்ளிட்ட முக்கிய துறைகளுக்குப் பயன்படும்' என்று தெரிவித்தார்.

8. ஓய்வூதியத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு (எஃப்டிஐ) வரம்பை 100 சதவீதம் வரை மத்திய அரசு அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும், இதற்கான மசோதா அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்பட வாய்ப்புள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

(i) தற்போது ஓய்வூதிய நிதியில் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பு 49 சதவீதமாக உள்ள நிலையில், அதை 100 சதவீதமாக அதிகரிக்கும் வகையில் ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையச் சட்டம் 2013–இல் திருத்தம் செய்ய வேண்டியுள்ளது. இதற்கான மசோதாவை நிகழாண்டு நாடாளுமன்ற மழைக்கால அல்லது குளிர்கால கூட்டத்தொடரில் மத்திய அரசு தாக்கல் செய்ய வாய்ப்புள்ளது.

(ii) ஏற்கெனவே காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பு 100 சதவீதம் வரை அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், ஓய்வூதியத் துறையிலும் அதேபோன்ற நடவடிக்கை முன்னெடுக்கப்பட உள்ளதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(iii) கடந்த ஆண்டு காப்பீட்டுத் துறையில் அந்நிய நேரடி முதலீட்டு வரம்பை 74 சதவீதத்தில் இருந்து 100 சதவீதமாக அதிகரிக்கும் மசோதாவுக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது.

9. மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள தென் கொரிய அதிபர் லீ ஜே மியுங்குடன் புது தில்லியில் ஆலோசனை நடத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர். தனது பயணத்தின்போது இரு நாடுகளிடையே பல்வேறு துறைகளில் தொழில்நுட்ப ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்தவுள்ளார். குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரை தென் கொரிய அதிபர் திங்கள்கிழமை சந்தித்துப்

பேசவுள்ளார்.

10. இந்தியாவின் விண்வெளிப் பயணத்தின் பகுப்பாய்வு – வரலாற்றுச் சிறப்புமிக்க 'ஆரியபட்டா' (Aryabhata) திட்டத்தை மையமாகக் கொண்டது.

(i) காலவரிசைப்படியான வரலாற்று உண்மைகள்: உலகளாவிய விண்வெளிப் போட்டி

- 1950-கள்: பூமிக்கு அப்பால் தங்கள் தொழில்நுட்பத் திறனை நிரூபிப்பதற்கான போட்டி அமெரிக்காவிற்கும் (USA) சோவியத் ஒன்றியத்திற்கும் (USSR) இடையே தொடங்கியது.
- அக்டோபர் 4, 1957: 'ஸ்புட்னிக்-1' (Sputnik-1) செயற்கைக்கோளை பூமியின் சுற்றுப்பாதையில் செலுத்தியதன் மூலம், விண்வெளிக்குச் சென்ற முதல் நாடாக சோவியத் ஒன்றியம் திகழ்ந்தது.
- பிப்ரவரி 1, 1958: அமெரிக்கா தனது முதல் செயற்கைக்கோளான 'எக்ஸ்புளோரர்-1' (Explorer-1)-ஐ விண்ணில் செலுத்தியது.
- பிப்ரவரி 11, 1970: ஜப்பான் தனது முதல் செயற்கைக்கோளான 'ஓசுமி' (Ohsumi)-ஐ விண்ணில் செலுத்தியது.
- ஏப்ரல் 24, 1970: சீனா தனது முதல் செயற்கைக்கோளான 'டாங் ஃபாங் ஹாங்-1' (Dong Fang Hong-1)-ஐ வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

(ii) காலவரிசைப்படியான வரலாற்று உண்மைகள்: இந்தியாவின் விண்வெளிப் பயணம்

இந்தியாவின் விண்வெளித் திட்டம், வெறும் போட்டி மனப்பான்மையை விட, தேசிய வளர்ச்சிக்காகத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதையே முதன்மை நோக்கமாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டது:

- நிறுவன முன்னோடிகள்: வளர்ந்து வரும் இந்தியா விரைவாக முன்னேற, விண்வெளித் தொழில்நுட்பம் எவ்வாறு உதவக்கூடும் என்பதைத் தொலைநோக்குடன் கணித்த சிற்பிகளாக டாக்டர் ஹோமி பாபா மற்றும் டாக்டர் விக்ரம் சாராபாய் ஆகியோர் போற்றப்படுகின்றனர்.
- 1969: இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) நிறுவப்பட்டது; இதன் மூலம் இந்தியாவின் விண்வெளிப் பயணம் முறைப்படுத்தப்பட்டது.
- 1971 (மூலோபாயத் திருப்பம்): இந்தியா தொடக்கத்தில் 100 கிலோ எடையுள்ள ஒரு செயற்கைக்கோளை, அமெரிக்காவின் 'ஸ்கவுட்' (Scout) ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தத் திட்டமிட்டிருந்தது. இருப்பினும், சற்று அதிக எடையுள்ள செயற்கைக்கோளை இலவசமாக விண்ணில் செலுத்தித் தருவதாக சோவியத் ஒன்றியம் முன்வந்தது. இதன் மூலம், உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதால், சோவியத் ஒன்றியத்தின் அந்தச் சலுகையை ஏற்றுக்கொள்மாறு பேராசிரியர் யு.ஆர். ராவ் பரிந்துரைத்தார்.
- 1971 (நிதி ஒப்புதல்): மூன்று மணி நேரம் நடைபெற்ற விரிவான அறிவியல் விளக்கக்காட்சிக்குப் பிறகு, இத்திட்டத்திற்கான சுமார் ₹3 கோடி (அந்நியச் செலாவணி உட்பட) நிதியை பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் ஒப்புதல் அளித்தார்.
- மே 10, 1972: சோவியத் அறிவியல் அகாடமிக்கும், இந்தியப் பிரதிநிதிகளுக்கும் (எம்.ஜி.கே. மேனன் உட்பட) இடையே ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தியா-சோவியத் ஒப்பந்தம்

கையெழுத்தானது.

- செப்டம்பர் 11, 1972: பெங்களூருவின் பீன்யா (Peenya) பகுதியில் அமைந்திருந்த நான்கு தொழிற்கூடங்களில், இத்திட்டத்திற்கான ஆய்வு மற்றும் செயல்பாட்டு வசதிகள் இயங்கத் தொடங்கின.
- ஜூன் 11, 1974: இத்திட்டத்தின் முன்னேற்றப் பணிகளை ஆய்வு செய்வதற்காக, பிரதமர் இந்திரா காந்தி பீன்யாவில் அமைந்திருந்த ஆய்வகங்களுக்கு நேரில் வருகை தந்தார்.
- ஏப்ரல் 19, 1975: ரஷ்யாவின் கபுஸ்தின் யார் என்ற இடத்திலிருந்து ஆர்யபட்டா ஏவப்பட்டது. இதன் மூலம், செயற்கைக்கோளை சுற்றுப்பாதையில் செலுத்திய உலகின் 11வது நாடாக இந்தியா ஆனது.

(iv) குறிப்பிடத்தக்க வரலாற்று மற்றும் தளவாட உண்மைகள்

- தற்காலிக ஆய்வகங்கள்: பீன்யா வளாகத்தில் இருந்த ஒரு பழைய கழிப்பறையை முதல் தரவு பெறும் மையம் மாற்றியமைத்தது.
- பழமையான போக்குவரத்து: 70களின் முற்பகுதியில் உயர் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு இல்லாததால், செயற்கைக்கோள் பாகங்கள் மிதிவண்டிகள் மற்றும் மாட்டு வண்டிகள் மூலம் கொண்டு செல்லப்பட்டன என்பது அனைவரும் அறிந்ததே.
- சிறப்பு கொள்முதல்: அதிகாரத்துவ தாமதங்களைத் தவிர்த்து, தேவையான பாகங்களை விரைவாகப் பெறுவதற்காக, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா வழியாகப் பயணிக்க இஸ்ரோ ஒரு சிறப்புக் குழுவை அமைத்தது.

(v) விளைவுகள் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம் (2026–2040)

- அடித்தள மரபு: இன்சாட் தொடர் (தொலைத்தொடர்பு), சந்திரயான் (சந்திரன்), மற்றும் மங்கள்யான் (செவ்வாய்) ஆகியவற்றுக்கு ஆரியபட்டா ஒரு முன்மாதிரியாக அமைந்தது.
- தற்போதைய உலகளாவிய நிலை: இன்று, இந்தியா ஒரு உலகளாவிய தலைவராக விளங்குகிறது, ஒரே திட்டத்தில் மோதல்கள் இன்றி 104 செயற்கைக்கோள்களை ஏவும் திறன் கொண்டது.
- எதிர்கால மைல்கற்கள்: சந்திரயான்-4 (சந்திர மண்ணை பூமிக்குத் திரும்பக் கொண்டுவருதல்) மற்றும் 2040-ஆம் ஆண்டுக்குள் விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்பும் இந்தியாவின் இலக்கு ஆகியவற்றை எதிர்நோக்குதல்